தமிழ் / TAMIL

தாள் I / Paper I

(இலக்கியம்) / (LITERATURE)

கால அளவு : **மூன்று** மணி நேரம் *Time Allowed : **Three** Hours*	மொத்த மதிப்பெண்கள் : **250** *Maximum Marks : **250***

வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

வினாக்களுக்கு விடையெழுதும், முன்பாகப் பின்வரும் அறிவுறுத்தல் ஒவ்வொன்றும் அருள்கூர்ந்து படிக்கவும் :

மொத்தம் **எட்டு** வினாக்கள் **இரண்டு பிரிவுகளாகப்** பகுக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினாக்கள் **1, 5** ஆகியவை கட்டாயம் விடையளிக்க வேண்டியவை. எஞ்சிய வினாக்களுள் பிரிவு ஒவ்வொன்றிலும் குறைந்தது **ஒரு** வினா தெரிவு செய்து **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஒரு வினா/பகுதிக்கு உரிய மதிப்பெண் அதற்கு நேரே குறிக்கப்பட்டுள்ளது.

விடைகள் **தமிழில்** எழுதப்பட வேண்டும்.

வினாக்களில் குறிக்கப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசைமுறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதியே விடையெழுதப்பட்டிருப்பினும் அது அடிக்கப்பட்ட அவ்வினாவும் விடையளிக்கப்பட்ட வினாவாகக் கணக்கிடப்படும். விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதி தெளிவாக அடிக்கப்பட வேண்டும்.

QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

Please read each of the following instructions carefully before attempting questions :

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, any **THREE** are to be attempted choosing at least **ONE** question from each section.*

The number of marks carried by a question/part is indicated against it.

*Answers must be written in **TAMIL**.*

Word limit in questions, wherever specified, should be adhered to.

Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.

Optional Province · optionalprovince.com

SECTION A

Q1. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : *10×5=50*

(a) தமிழ் உயர்தனிச் செம்மொழி *10*

(b) தமிழில் வேற்றுமை உருபுகள் *10*

(c) சங்க இலக்கியத் தொகை நூல்கள் *10*

(d) தொல்காப்பியம் சுட்டியுள்ள உரைநடை வகைகள் *10*

(e) 'குறவஞ்சி' இலக்கியம் *10*

Q2. (a) மொழி அமைப்பியல் நோக்கில் இக்காலத் தமிழ் பெயர்ச் சொற்களைப் பாகுபடுத்தி ஆய்க. *15*

(b) இரட்டைக் காப்பியப் புனைவுகளில் மகளிர் மேம்பாட்டுச் சிந்தனைப் பதிவுகளை ஆராய்க. *15*

(c) ஆழ்வார் பாசுரங்களில் நாயகன் - நாயகி பாவம் தனித்துவம் பெற்றுள்ளமையை ஆய்க. *20*

Q3. (a) இந்தியமொழிக் குடும்பத்தில் தென் திராவிட மொழிகளுக்கிடையே காணலாகும் ஒப்புமைக் கூறுகளை ஆராய்க. *15*

(b) சங்க இலக்கியப் புறத்திணை மரபுகளைத் தொல்காப்பியம் வழி விளக்குக. *15*

(c) புதுக்கவிதைகளில் மனிதநேயச் சிந்தனைகள் பாடுபொருளாக்கப்பட்டுள்ளமையை மதிப்பிடுக. *20*

Q4. (a) தமிழில் துணை வினைகளின் பயன்பாட்டைச் சான்றுகளுடன் விளக்குக. *15*

(b) சங்க இலக்கிய அடிக்கருத்துப் பரவல் நீதி நூல்களில் காலந்தோறும் தாக்கம் பெற்றுள்ளமையை ஆராய்க. *15*

(c) நாவல் இலக்கிய வகைப்பாட்டில் வட்டார நாவல்களின் பொதுமைப் பண்புகளை மதிப்பிடுக. *20*

Optional Province · optionalprovince.com

SECTION B

Q5. பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : *10×5=50*

(a) அறநெறித் திறனாய்வு *10*

(b) அங்கதச் சுவை நிறைந்த இலக்கியம் (Satire) *10*

(c) கதைப்பாடல்களில் அடக்கு முறை வெளிப்பாடு *10*

(d) விடுகதை அமைப்பு *10*

(e) நாயக்கர் காலக் கவின்கலைச் சிறப்புகள் *10*

Q6. (a) இலக்கியத் திறனாய்வில் உளவியல் அணுகுமுறையின் முக்கியப் பயன்பாட்டை ஆய்க. *15*

(b) தமிழ் இதழியல் வளர்ச்சி வரலாற்றுப் படி நிலைகளை முறைப்படுத்தி விளக்குக. *15*

(c) சங்ககால மக்களின் நம்பிக்கை நெறியிலான வழிபாட்டு மரபுகளை ஆராய்க. *20*

Q7. (a) ஒப்பிலக்கியத்தின் பண்புகளையும், பயன்களையும் விளக்குக. *15*

(b) நாட்டார் பாடல்களில் வாழ்வியல் சித்தரிப்பு மையப்படுத்தப்பட்டுள்ளமையை ஆராய்க. *15*

(c) சமணர்களின் தமிழிலக்கியத் தொண்டினை விளக்குக. *20*

Q8. (a) எண்வகை மெய்ப்பாடுகளைச் சான்றுகளுடன் விளக்குக. *15*

(b) தமிழ் மொழி இலக்கியப் புத்தாக்க வளர் நிலையில் மொழிபெயர்ப்பின் பங்களிப்பினை மதிப்பிடுக. *15*

(c) சோழர் காலக் கட்டடக்கலை மாண்புகளை விவரிக்க. *20*

Optional Province · optionalprovince.com